**களுத்துறை பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 மார்ச் 04 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 யூலை 30 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்தெம்பர் 30 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து களுத்துறை பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2007 முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கு உரியதாக செலுத்தப்பட்ட ரூபா 211,962 தொகையான நிலுவை சம்பளம் மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | நிலுவை சம்பளத்தை செலுத்துவதற்காக நிதி ஏற்பாடு ஒதுக்கப்படாதிருந்தமையால் மீளாய்வாண்டின் போது உரிய செலவினங்கள் செய்யப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். |
| (ii) | சம்பளம் மற்றும் வேதன செலவின தலைப்பில் ரூபா 57,600 பெறுமதியான நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அந்த சொத்துக்கள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iii) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 183,540 பெறுமதியான நூலக புத்தகங்கள் | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (iv) | மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் இருப்பு பெறுமதியாக பௌதீக இருப்பு கணக்கீடு செய்வதற்கு பதிலாக ரூபா 3,281,111 தொகையான புத்தக பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஆண்டின் இறுதியில் மெய்மெய்யாய்வு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாமையால் புத்தக பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். |

**(ஆ) இணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற ரூபா 18,882,930 தொகையான 02 கணக்கு விடயங்கள் மற்றும் அவற்றிற்குரிய பட்டோலைகளுக்கு இடையே ரூபா 4,356,613 தொகை மற்றும் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட ரூபா 3,199,031 தொகையான இன்னும் 02 கணக்கு விடயங்கள் மற்றும் செலவின பேரேட்டிற்கு இடையே ரூபா 254,969 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | மீதிகளின் வேறுபாடுகளை இணக்கம் செய்து சரிசெய்யப்பட வேண்டும். | இது தொடர்பாக பரீட்சித்து எதிர் காலத்தில் கணக்குகள் சரி செய்யப்படும். |

**(இ) பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 03 செயற்திட்டங்களுக்காகவும் கடந்த வருடங்களிலும் பெறவேண்டிய ரூபா 1,460,165 தொகையொன்று சபைக்கு கிடைக்கப் பெற்றிருக்கவில்லை. | உரிய பணத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | களுத்துறை பிரதேச செயலகம் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்து பெறவேண்டியிருந்தது என அறியத்தருகின்றோம். |
| (ii) | 2014 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை 39 செயற்திட்டங்களுக்காக ஒப்பந்த சங்கங்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 3,422,277 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய சங்கங்களுக்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். |

(ஈ) **கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| விரிவான பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 3,644,267 தொகையான தளபாட உபகரண மீதிகளை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | விரிவான பட்டோலைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | சில ஆண்டுகளுக்குரிய தளபாட உபகரணங்களின் பெறுமதி இனங்காணப்பட முடியாதிருந்தமையினால் எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

1.4 **இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | | பெறுமதி | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் | - | | | |
| (i) | 21 ஆம் பிரிவு | | நிர்மாணிக்கப்பட்ட மற்றும் நிர்மாணிக்க வேண்டிய வீதிகளை உள்ளடக்கி சபைக்குச் சொந்தமான மொத்த வீதிகள் தொடர்பாக இனங்காணல் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சபைக்குச் சொந்தமான சகல வீதி முறைமைகள் இனங்காணப்பட வேண்டும். | உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என அறியத்தருகின்றோம். |
| (ii) | 134(1) ஆம் பிரிவு | | ஆதன வரிக்காக புதிய இனங்காணல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | ஆதன வரிக்காக புதிய இனங்காணல்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். | புதிய இனங்காணல்கள் மேற்கொள்ளப்படுகின்றது என அறியத்தருகின்றோம். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (iii) | 149 ஆம் பிரிவு | | சுற்றுலா சபையில் பதிவு செய்துள்ள இரண்டு நிறுவனங்களில் நூற்றுக்கு ஒரு சதவீதம் வரை வரி பணம் அறவிடப்பட்டிருக்க வில்லை. மேலும் 07 நிறுவனங்களில் இருந்து சிற்றுண்டிச்சாலை வருமானங்கள் மாத்திரம் கவனத்தில் கொள்ளப்பட்டு வரி அறவிடப்பட்டிருந்த து. | சுற்றுலா சபையில் பதிவு செய்துள்ள சகல நிறுவனங்களில் இருந்தும் ஒரு சதவீத வரி அறவிடப்பட வேண்டும். | நூற்றுக்கு ஒரு சதவீதம் வரி செலுத்துமாறு நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ள துடன், இந்த அறவிடல் தொடர்பாக உள்ளுராட்சி நிறுவனங்களின் அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகள் கோரப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். |
| (iv) | 160 ஆம் பிரிவு | - | நிலுவை ஆதன வரியை அறவிடுவதலின் இறுதிக் கட்டமாக ஆதனங்கள் தடை செய்யப்பட்டிருக்க வில்லை. | நிலுவை ஆதன வரி விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவை தொகையில் ஒரு பகுதி அறவிடப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 571(1)(2) | 1,727,956 | காலாவதியான வைப்புக்கள் தொடர்பான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | காலாவதியான வைப்புக்களை வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். |
| (இ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதி 2016/30 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையி ன் 3.1 ஆம் பந்தி | - | 20 வாகனங்களுக்கு எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டி ருக்கவில்லை. | வாகனங்களின் எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும். | எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்படுகி ன்றது என அறியத்தருகின்றோம். |
| (ஈ) | 2018 நவம்பர் 16 ஆம் திகதிய 2098 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோஷலிச | 116,500 | வஸ்கடுவ உப அலுவலக அதிகாரப் பிரதேசத்தில் காட்சிப்படுத்தப்பட் டுள்ள 22 அறிவித்தல் | அறிவித்தல் பதாதை கட்டணம் அறவிடப்பட வேண்டும். | பணம் செலுத்தாதுள்ள அறிவித்தல் பதாதைகளில் அதிகமான அளவு கழற்றி அகற்றப்பட்டுள்ளதுட |

| | | |
|---|---|---|
| குடியரசின் வர்த்தமானி | பதாதைகளுக்காக ரூபா 116,500 தொகையொன்று அறவிடப்பாட்டிருக் கவில்லை. | ன், எஞ்சிய பதாதைகளுக்காக பணத்தை செலுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 58,581,142 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 7,712,853 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 10,467,358 | 10,708,440 | 10,283,908 | 6,691,260 | 9,957,320 | 10,802,034 | 7,481,956 | 5,777,486 |
| (ii) | வாடகை | 276,600 | 322,800 | 292,300 | 57,500 | 276,600 | 276,600 | 249,600 | 27,000 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 2,562,000 | 3,891,908 | 3,891,934 | - | 2,460,000 | 682,209 | 3,497,320 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 75,000,000 | 75,000,000 | 57,729,893 | 90,666,065 | 25,707,733 | 13,000,000 | 80,578,627 | 28,801,298 |
| | | 88,305,958 | 89,923,148 | 14,468,142 | 97,414,825 | 38,401,653 | 24,760,843 | 91,807,503 | 44,605,784 |

#### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

(அ) வீதவரியும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவையாக காணப்பட்ட வரி மீதியில் 01 வருடத்திற்கு குறைவான நிலுவை ரூபா 670,199 தொகை, 01-03 வருடங்களுக்கு | நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். |

| | | | |
|---|---|---|---|
| | இடையிலான நிலுவை ரூபா 3,221,665 தொகை, 03–05 வருடங்களுக்கு இடையிலான நிலுவை ரூபா 547,644 தொகை மற்றும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவை ரூபா 286,282 ஆகும். | | |
| (ii) | 03 கிராம சேவகர் பிரிவுகளுக்குரிய 465 ஆதன வரி அலகுகளுக்கு மீளாய்வாண்டில் சிட்டையிடல் ரூபா 481,442 தொகையில் இருந்து எந்தவொரு தொகையும் ஆண்டில் அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஆதன வரியிலிருந்து விடுவிக்கப்படாத மையினால் வரி அறவிடப்பட வேண்டும். | அந்த பிரதேசங்களில் ஆதன வரி அறவிடும் போது ஏற்பட்டிருந்த பிரச்சினைகளினால் உள்ளூராட்சி ஆணையாளரினால் வழங்கப்பட்டுள்ள ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (ஆ) | வியாபார மற்றும் கைத்தொழில் வரி<br>-------------------------------------------------- | | |
| | வஸ்கடுவ உப அலுவலக அதிகார பிரதேசத்தில் 2018 ஆம் ஆண்டின் போது வியாபார வரி அறவிடப்பட்ட 05 மருத்துவ நிலையங்களுக்காக 2019 ஆம் ஆண்டின் போது வியாபார வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | வியாபார வரி அறவிடப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் மெய்மெய்யாய்வு அறிக்கைகள் பெறப்படாதிருந்தமையினால் 2020 ஆம் ஆண்டிற்காக மெய்மெய்யாய்வு செய்யப்பட்டதுடன், வியாபார சரி செலுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். |
| (இ) | அனுமதிப் பத்திர கட்டணம்<br>------------------------------------------------ | | |
| | வஸ்கடுவ உப அலுவலக அதிகாரப் பிரதேசத்தில் 2018 ஆம் ஆண்டில் வியாபார அனுமதிப் பத்திரம் பெற்ற 12 வியாபார நிறுவனங்கள் 2019 ஆம் ஆண்டில் வியாபார அனுமதிப் பத்திரங்களை பெற்றிருக்கவில்லை. | திறந்து வைக்கப்பட்டுள்ள வியாபாரங்களக்காக வியாபார அனுமதிப் பத்திரம் விநியோகிக்கப்பட வேண்டும். | அனுமதிப் பத்திரத்தை பெற்ற நிறுவனங்களின் பட்டியல்கள் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

### 2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) நீதிமன்றத் தண்டப்பணம் | | |
| 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 3,000,000 தொகை, ரூபா 3,000,000 மற்றும் ரூபா 15,000,000 ஆக சிட்டையிடப்பட்டிருந்த போதும், மீளாய்வாண்டின் இறுதி வரையில் அதில் ரூபா 10,950 தொகை மாத்திரமே கிடைத்திருந்தது. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | பணத்தை எதிர் காலத்தில் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். |
| (ஆ) முத்திரைக் கட்டணம் | | |
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடம் இருந்தும் ஏனைய அதிகார தரப்பினரிடம் இருந்தும் 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 69,677,015 ஆகும். | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | பணத்தை எதிர் காலத்தில் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். |

### 2.2.4 முச்சக்கர வண்டி வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| வஸ்கடுவ உப அலுவலக அதிகார பிரதேசத்தில் பதிவு செய்துள்ள 34 முச்சக்கரவண்டி தரித்து வைத்தல் இடங்களில் 398 முச்சக்கர வண்டிகள் காணப்பட்ட போதும், 39 முச்சக்கர வண்டிகளில் மாத்திரம் பணம் அறவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிலுவை முச்சக்கரவண்டி வருமானம் ரூபா 215,400 ஆகும். | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | திட்டமிடப்பட்ட பிரகாரம் முச்சக்கரவண்டி வருமானத்தை அறவிடுவதற்கு முடியாதிருந்ததை அறியத்தருகின்றோம். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | உப விதிகள் | | |
| | பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 பிரிவின் கீழ் 16 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் சபையினால் 04 பிரதான விடயங்களுக்காக மாத்திரம் உப விதிகள் விதிக்கப்பட்டிருந்தது. | உப விதிகள் விதிக்கப்படாதிருந்த விடயங்களுக்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டும். | 2015 மே 28 ஆம் திகதிய வர்த்தமானியில் பகிரங்கப்படுத்தப்பட்ட 15 உப விதிகள் மற்றும் 1988 வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 04 உப விதிகளும் முச்சக்கரவண்டிகளுக்காக உப விதியொன்றும் விதிக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். |
| (ஆ) | செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு புறம்பான செயற்பாடுகள் | | |
| | செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு புறம்பாக ரூபா 45.18 மில்லியன் தொகையான 108 செயற்திட்டங்கள் ஆண்டின் போது அமுல்படுத்தப்பட்டிருந்தது. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தை பின்பற்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். | இயற்கை அனர்த்த நிலைமைகள் காணப்பட்டதன் காரணமாக முன்னுரிமைகளை மாற்றுவதற்கு ஏற்பட்டமையினால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது என அறியத்தருகின்றோம். |
| (இ) | முறையற்ற வீதி பராமரிப்பு | | |
| | பௌதீக திட்ட வீதியின் கீழ் வீதிகளை பழுதுபார்ப்பதற்காக வருடாந்தம் ரூபா 13 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்ட போதிலும், அந்த நிதி ஏற்பாடு முன்னுரிமையின் பிரகாரம் வருடாந்த பராமரிப்பு திட்டமொன்று காணப்படவில்லை. வீதி நிர்மாணித்தல் மற்றும் பராமரித்தல் செயற்பாடுகளுக்காக ரூபா 1,005,440 கிரயமான மூலப் | நிதி ஏற்பாட்டின் முன்னுரிமையின் அடிப்படையில் வருடாந்த பராமரிப்பு திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். | 2020 இல் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

| | | |
|---|---|---|
| பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்ட போதிலும், அவற்றைப் பயன்படுத்துதல் தொடர்பான விரிவான தகவல்கள் சபையிடம் காணப்படவில்லை. | | |
| (ஈ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்<br>------------------------------------------------ | | |
| கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக முறையான திட்டமொன்று தயாரிக்கப்பட்டு கழிவுப் பொருளை அகற்றுதலுக்காக வெற்றிகரமான முறைமையொன்று அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | முறையான திட்டத்தின் பிரகாரம் கழிவுப் பொருள் முகாமைத்துவம் செய்யப்படல் வேண்டும். | சபை அதிகாரப் பிரதேசத்தில் 35 சதவீதத்தை மேவுகை செய்யும் வகையில் கழிவுப் பொருட்கள் சேகரிக்கப்படுவதுடன், ஐந்து வருட திட்டமொன்று கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக தயாகரிக்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். |
| (உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு<br>------------------------------------------------ | | |
| சபையினால் 07 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் இனங்காணப்பட்ட போதிலும், மீளாய்வாண்டின் போது அதில் 02 நோக்கங்களுக்காக மாத்திரமே நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. மேலும், நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக போதியளவான செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களுக்காக போதியளவான நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டு அந்த செயற்திட்டங்களுக்காக முன்னுரிமை வழங்கி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி திட்டத்தின் பிரகாரம் நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்தும் போது வெளி நிறுவனங்களின் அனுசரணையின் அடிப்படையிலும், சபை ஊழிய பங்களிப்பின் அடிப்படையிலும் மேற்கொள்ளப்படும் என அறியத்தருகின்றோம். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**
------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மோட்டார் வாகன மதிப்பீட்டு அறிக்கையில் இனங்காணப்பட்ட பயன்படுத்த முடியாதிருந்த வாகனங்களை விற்றுத்தீர்த்து கணக்குகளில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத வாகனங்களை விற்றுத் தீர்த்து கணக்குகளில் இருந்து அகற்றப்பட வேண்டும். | எதிர்காலத்தில் விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | ஊழியர் வெற்றிடம் மற்றும் மிகை | | |
| (அ) | வெற்றிடமான செயலாளர் பதவியின் பதிற் கடமைக்காக முகாமையாளர் முகாமைத்துவ உதவியாளர் தரம் I உத்தியோக்கத்தர் நியமிக்கப்பட்டிருந்தார். | அத்தியவசிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் 2015 ஆம் ஆண்டு முதல் உரிய பதவிக்கு உள்ளபடியாக உத்தியோகத்தர் நியமிக்கப்படும் வரை செயலாளர் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு நியமிக்கப்படார் என அறியத்தருகின்றோம். |
| (ஆ) | முகாமைத்துவ உதவியாளர் பதவியில் 01 மிகையும், சாரதி, வேலைக்கள தொழிலாளர்கள் மற்றும் சுகாதார தொழிலாளர் பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டன. | பதவியணியினரில் மிகை பதவிகளை முறைமைப்படுத்துவதற்கும் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 01 முகாமைத்துவ உதவியாளர் பதவியில் மிகையொன்று காணப்படுகின்றது என அறியத்தருகின்றோம். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 ஆம் ஆண்டில் மாகாண சபை நிதியத்தின் கீழ் ரூபா 2,996,332 தொகை செலவில் உக்காத கழிவுப் பொருட்களை சேகரிப்பதற்காக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடம் ஒன்று விளைவற்று காணப்பட்டதுடன், உக்காத கழிவுப் பொருட்களை கூறுகளாக்குவதற்காக பிரதேச செயலகத்தில் இருந்து | சொத்துக்கள் உரிய பணிகளுக்காக பயன்படுத்தப்பட வேண்டும். | மேல் மாகாண கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகார சபையுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடலின் போது பேலின் இயந்திரம் பொஹொரவத்தை கழிவுப் பொருள் நிரப்பும் நிலத்தில் |

| | | |
|---|---|---|
| வழங்கப்பட்டுள்ள கூறிடல் இயந்திரம் விளைவற்று காணப்பட்டது. | | ஸ்தாபித்துக் கொள்வதற்கு இணங்கியிருந்ததுடன் கட்டிடத்தை சுகாதாரப் பிரிவின் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகின்றது என அறியத்தருகின்றோம். |
| (ஆ) 2017 மார்ச் மாதம் முதல் மூடப்பட்டுள்ள நெணசல நிலையத்திற்காக பயன்படுத்தப்பட்ட 05 கணனிகளை உள்ளடக்கிய அலுவலக உபகரணங்கள் அநோகமானவை நாகொட உப அலுவலகத்தில் விளைவற்று காணப்பட்டது. | நெணசல நிலையத்தை திறந்து அதனை பயன்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வஸ்கடுவ நூலகத்தின் முன் பக்கம் புதிய கட்டிடம் ஒன்று நெணசல ஸ்தாபித்துக் கொள்வதற்கு நிர்மாணிக்கப்பட்டதுடன் , உரிய உபகரணங்கள் நாகொட உப அலுவலகத்தினதும், நாகொட பொது நூலகத்தினதும் பயன்பாட்டிற்காக அனுப்பப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். |

**3.4.2 சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான சகல காணி கட்டிடங்களினதும் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு பதிலாக புதிய மதிப்பீட்டு பெறுமதியில் பெறப்பட்ட காணி கட்டிடங்கள் சிலவற்றின் பெறுமதி மாத்திரம் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | சகல நிலையான சொத்தக்களும் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | கணக்கீடு செய்யப்படாத நிலையான சொத்துக்களை மதிப்பீடு செய்து எதிர்காலத்தில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்படும். |

**3.4.3 வாகனப் பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்ட 02 டெக்டர், 04 டேலர், 02 கை உழவு இயந்திரம் மற்றும் தண்ணீர் பௌஸர் என்பவற்றை பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ அல்லது | பழுதுபார்ப்பதற்கோ அல்லது விற்றுத் தீர்ப்பதற்கோ நடவடிக்கை | விற்றுத் தீர்க்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என அறியத்தருகின்றோம். |

| | | |
|---|---|---|
| விற்றுத் தீர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | எடுக்கப்பட வேண்டும். | |

**3.4.4 இனங்காணப்பட்ட நட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| காணாமல்போயிருந்த 772 நூலக புத்தகங்கள் தொடர்பான நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | புத்தகங்கள் காணாமல் போனமை தொடர்பாக பரிசோதனையொன்று மேற்கொண்டு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரிடம் இருந்து நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நட்டத்தை அறவிடுவதற்காக மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என அறியத்தருகின்றோம். |

**3.5 பெறுகைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் அமுல்படுத்தப்பட்ட 04 செயற்திட்டங்களுக்கு மூலப் பொருட்களை வழங்கியதற்காக ஒப்பந்த சங்கத்திற்கு ரூபா 1,031,455 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | நிர்மாணிக்கப்பட வேண்டிய வீதிகளை இனங்கண்டு நிர்மாணிப்புக்களை தயாரித்து அதன் பிரகாரம் மூலப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட வேண்டும். | உரிய கோவைகளை சரியான பிரகாரம் இனங்காண முடியாதிருந்தமையினால் பதிலளிப்பதற்கு முடியாதிருந்தது என அறியத்தருகின்றோம். |